நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.387/2015

<u>அ.சா: 7 (LW 7)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜசேகரன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

02.09.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
--------------------------------------------------------------------------

**எதிரி ஆஜர் இல்லை.**

*** Evidence recoded by through V.C**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.11 பி.ப

நான் தற்பொழுது கோவை மாநகரம் செல்வபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் தேனி மாவட்டம் பி.சி.பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபொழுது 09.06.2015ம் தேதி பி.சி.பட்டி காவல் நிலையத்தில் பணியிலிருந்த தலைமை காவலர் தங்கபாண்டி என்பவர் அரண்மனைபுதூரை சேர்ந்த காமராஜ் என்பவரிடமிருந்து மனுவினை பெற்று நிலைய மனு இரசீது எண்.359/2015 ஆக பதிவு செய்து எனது விசாரணைக்கு பெற்றுக்கொண்டு 22.08.2015 அன்று நிலைய குற்ற எண்.721/2015 ச/பி.341, 506(2), 294(b) IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3.** பின்பு வழக்கின் சம்பவ இடத்தினை 23.08.2015 காலை 07.00 மணிக்கு அரண்மனைபுதூர்


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.09.02 17:44:50 +0530

பஞ்சாயத்து அலுவலகம் அருகே உள்ள டூ வீலர் ஒர்க்ஷாப் சென்று பார்வையிட்டு சாட்சிகள் ரவிசந்திரன், ஈஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இட மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4.** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. அவற்றில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் காமராஜ், பால்ராஜ், பூந்தியம்மாள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் புகார்தாரரரை அசிங்கமாக பேசியது உண்மையென தெரிய வந்ததால் எதிரிகள் பாண்டீஸ்வரன், வேல்தாய் ஆகியோர்களை தேடிக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் தேனி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 26.08.2015 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி முன்பிணை பெற்றதாக தெரிய வந்தது. இவ்வழக்கில் புகாரினை பெற்று மனு இரசீது வழங்கிய தலைமை காவலர் தங்கபாண்டியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் அனைத்து விசாரணையும் முடித்து 05.09.2015 அன்று எதிரிகள் பாண்டீஸ்வரன், வேல்தாய் ஆகியோர்கள் மீது ச/பி.341, 294(b), 506(2) இ.த.ச.ஆக குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

குற்ற இறுதியறிக்கையில் கையில் வைத்திருந்த இரும்பு பைப் என்று இடைச்சொற்களாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் யார் எழுதினார்கள் என்று எந்த சுருக்கொப்பம் இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் ஒயிட்னர் வைத்து அழித்து நிலா டூ வீலர் ஒர்க்ஷாப் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். யாரால் அவ்வாறு திருத்தப்பட்டுள்ளது என்றால் என்னால் திருத்தப்பட்டுள்ளது. அந்த இடத்தில் திருத்தப்பட்டதற்கான சுருக்கொப்பம் இல்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் பஞ்சாயத்து அலுவலகம் எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னப்படி சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கொடுக்கல் வாங்கல் மனதில் வைத்துக்கொண்டு சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து


JAYASUDHA T S P Digitally signed by JAYASUDHA T S P Date: 2026.09.02 17:44:56 +0530

ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.56 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.09.02 17:45:00 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 02.09.2026